நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.க.சிவகுமார்.,

மூ.மு.எண். 1315/2025/எப்1, நாள் : 09.03.2026.

பொருள் : மனைப்பிரிவு – நாமக்கல் மாநகராட்சி – பெரியப்பட்டி கிராமம் – சர்வே எண்.127/2A4B இல் (0.1174 ஹெக்டர்) 0,29 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவு – சர்வே எண்ணுக்கு சந்தை மதிப்பு நிர்ணயம் செய்து தர கோருதல் – தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(3)) துறை, நாள்.04.05.2017.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். NKL/ TVZM6DMQ / 60930/ 2026/ TCP, நாள்.24.02.2026.
3. திருமதி.P.M.சுமதி, க/பெ.பிரபாகரன், 2/362B, கந்தபுரி, ரெட்டிபட்டி, நாமக்கல் என்பவரின் விண்ணப்பம், நாள். 26.02.2026.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு கடிதம், நாள்.05.03.2026.

*****

உத்தரவு:–

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம் சர்வே எண். 127/2A4B இல் உள்ள (0.1174 ஹெக்டர்) 0,29 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள உத்தேச குடியிருப்பு மனைக்கு உட்பிரிவு அனுமதி கோரி தங்களால் நேரிடையாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதற்கு, பார்வை–2இல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் உத்தரவில், மனை உட்பிரிவிற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.35/2026 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்படி மனை உட்பிரிவிற்கு பார்வை–1இல் காணும் அரசாணையில் குறிப்பிட்டள்ளவாறு,

இம்மாநகராட்சிக்கு மனைப்பிரிவு கட்டணம் ரூ. 25,000/–, மனை உட்பிரிவு கட்டணம் ரூ.2000/–, வளர்ச்சி கட்டணம் ரூ.6,000/– மற்றும் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.3,500/– ஆகியவற்றை 06.03.2026 ஆம் தேதியன்று மாநகராட்சி கருவூலத்தின் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை–1ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள், மனை உட்பிரிவு நிபந்தனைகள் மற்றும் பார்வை–2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி உட்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடும் செயல்முறைகள் வரைவு ஒப்புததலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

9/3/26

ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி.

9.3.26

பெறுநர்.

திருமதி.P.M.சுமதி,
க/பெ.பிரபாகரன்,
2/362B, கந்தபுரி,
ரெட்டிபட்டி, நாமக்கல்
நகல்.

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், நாமக்கல்– அவர்களின் தகவலுக்கு.
2. மாநகரதிட்டமிடுநர், இளநிலை பொறியாளர் திட்டம், நாமக்கல் மாநகராட்சி.
நாமக்கல் மாநகராட்சி.
3. வருவாய் அலுவலர், நாமக்கல் மாநராட்சி – காலி மனைகளின் மீது வரி விதிப்பு செய்யும் பொருட்டு.